Registered as a News Paper பக்கங்கள் 06 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 மாசி 14 [25 - 02 - 1998] வியாழக்கிழமை ஓசை 07

யாழ்ப்பாணம்

## கூட்டுறவுச் சங்கங்களுக்கு 3,800 மெ. தொன் உணவு

யாழ். மாவட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கென சுமார் 3,800 மெற்றிக்தொன் உணவு மற்றும் பொருட்களை கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் எடுத்து வருவதற்கு தனியான கப்பலொன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தற்பொழுது யாழ். குடாநாட்டில் ஏற்பட்டுள்ள உணவு மற்றும் பொருட்களின் தட்டுப்பாட்டினை ஓரளவு பூர்த்தி [5-ம் பக்கம் பார்க்க]

# மதுறுஓயா மினிமுகாம் தகர்ப்பு; 9 படையினர் பலி; பலர் காயம்

[யாழ்ப்பாணம்]

பொலநறுவை மாவட்டம் 'தம்மின்ன' என்னுமிடத்தில் அமைந்துள்ள மதுறு ஓயா இராணுவ முகாமிற்கு உதவியாக அமைக்கப்பட்டிருந்த மினிமுகாம் ஒன்றை நேற்றுமுன்தினம் அதிகாலை 1ஈ.4'' மணியளவில் விடுதலைப்புலிகள் தாக்கி அழித்தனர். புலிகளின் இவ் அதிரடித் தாக்குதலில் குறைந்தது ஒன்பது இராணுவத்தினர் கொலப்பட்டனர். பலர் காயமடைந்தனர். பலரக ஆயுதங்களும், இராணுவத் தளபாடங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

விடுதலைப்புலிகள் தரப்பில் இரண்டு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

விடுதலைப் புலிகள் மேற்கொண்ட வெற்றிகரமான இத் தாக்குதல் சுமார் 12 நிமிடங்களே மட்டுமே நீடித்தது. இம் மினிமுகாம் ''மதுறுஓயா'' நீர்த்தேக்கத்திற்குப் பாதுகாப்பாகவும், பயிற்சி நடத்துவதற்கென அமைக்கப்பட்டதுமான மதுறு ஓயா இராணுவ முகாமிற்கு உதவுவதற்கென அமைக்கப்பட்டு இருந்ததாகும். முதலில் இம் முகாமை முற்றுகையிட்ட விடுதலைப் புலிகள் பின்னர் இதனை முற்றாகத் தாக்கி அழித்தனர்.

புலிகளின் இத்தாக்குதலில் ஒன்பது இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பொலநறுவை மாவட்டத்திற்குள் ஊடுருவி ஒரு மினி முகாமை விடுதலைப் புலிகள் தகர்த்தமையானது சிறிலங்கா இராணுவ வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## கைப்பற்றிய ஆயுதங்கள்

மதுறுஓயாவில் மினிமுகாம் தகர்ப்பின் போது விடுதலைப் புலிகள் இராணுவத்தினரிடமிருந்து கைப்பற்றிய ஆயுதங்களினதும் இராணுவப் பொருள்களினதும் விபரம் வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 303 எல். எம். ஜி. | 01 | ரி 56 -01 | 02 |
| 303 மேலதிக பரல் (L.M.G) | 01 | ரி 56 மகசின் | 08 |
| 303 எல். எம் ஜி. மகசின் | 10 | ஏ கே. கோல்சர் | 03 |
| 303 ரவைகள் | 868 | நடுத்தர ரவைகள் | 725 |
| ஆர். பி. ஜி | 01 | ஜி3 புஸ்பட் | 01 |
| ஆர். பி. ஜி. செல்கள் | 14 | ஜி3 மகசின் | 14 |
| 02 அங்குல மோட்டர் | 02 | ஜி3 கோல்சர் | 02 |
| 02 அங். மோட்டர் செல்கள் | 20 | எஸ். எல். ஆர். | 01 |
| | | எஸ் எல். ஆர். மகசின் | 09 |
| | | நேட்டோ ரவைகள் | 701 |
| | | சொட்கன் | 01 |

[5ஆம் பக்கம் பார்க்க]

## இராணுவப் பிடியில் சிக்கிய ஐவர் நேற்று விடுதலை

[வடமராட்சி]

இளவாலைப் பகுதியில் ஏழு மாதங்களாக இராணுவப் பிடியில் சிக்கிக் கொண்ட மூன்று சிறுவர்கள் உட்பட ஐவர் நேற்று 'குமாரி' கப்பல் மூலம் பருத்தித்துறையைவந்து சேர்ந்தனர்.

இளவாலையில் சிக்குண்டிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரிகளான சிவபாலன் கிருஷ்ணவேணி [வயது 02] மாதகல், சிவபாலன் குகேந்திரன் [வயது 10] மாதகல் மற்றும் வசந்தகுமாரி நடராசா [வயது 14] மாதகல் ஆகியோரும் கடந்த ஞாயிற் (5ஆம் பக்கம் பார்க்க)

## கைப்பற்றிய பகுதிகளை காப்பாற்றுவது கடினம்

### ''ரணவிம'' உணர்த்திய பாடம்

[கொழும்பு]

''யாழ். குடாநாட்டின் எந்தப்பகுதியையாவது சிறிலங்கா இராணுவத்தினர் கைப்பற்றிக் கொண்டாலும் கூட அப்பகுதியில் தொடர்ந்து நிலைகொண்டிருக்க முடியாது என்பதையே நேற்று முன்தினம் மாதகல் பகுதியில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கை சிறிலங்கா அரசுக்கு உணர்த்தியுள்ளது'' இவ்வாறு பி பி சி நேற்றைய தனது செய்தி விமர்சனத்தில் தெரிவித்தது.

இவ் விமர்சனத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: விமானப்படை, கடற்படை, தரைப்படை ஆகிய முப்படைகளும் இணைந்து மாதகல் தளத்திற்கு மேற்கே உள்ள விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது தாக்குதல் நடாத்தி அவர்களை அழிப்பதே தமது இராணுவ நடவடிக்கையின் நோக்கம் என்று இராணுவ தளபதி கூறுகின்றார்.

நேற்றுமுன்தினம்நடந்தஇராணுவ நடவடிக்கையின்போது தமது தரப்பில் பெரிய அளவில் சேதம் இல்லை என்றும் தளபதிகள் கூறுகின்றனர்.

கடந்த மூன்று ஆண்டுகளாக வடபகுதியில் சிறிலங்கா அரசினால் பிறப்பிக்கப்பட்ட காலவரையறையற்ற ஊரடங்கு உத்தரவிற்கு மக்கள் பழக்கப்பட்டு விட்டனர். இதனால் இப்பகுதிகளில் சிறிலங்கா அரசு ஊரடங்கு உத்தரவை அமு [5 ஆம் பக்கம் பார்க்க]

## இரு போராளிகள் வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

'மதுறு ஓயா'வில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட வெற்றிகர தாக்குதலில் இருபோராளிகள் வீரச்சாவடைந்தனர்.

★ லெப். மோகன்சன் (ஜெயசீலன்) நடராசா நவரெட்ணராஜா, இருதயபுரம் மட்டக்களப்பு.

★ 2ஆம் லெப். கதிரவேல் (வாமதேவன்) மத்தியூஸ் தாயூ சொறிக்கல்முனை, சபயாந்துறை.

ஆகிய இருவருமே வீரச்சாவு அடைந்தவர்களாவர். இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## ''யுத்தகள'' நடவடிக்கையில் 6 படையினர் படுகாயம்

(கொழும்பு)

நேற்றுமுன்தினம் மாதகலில் மேற்கொள்ளப்பட்ட ''ரணவிம'' [யுத்தகளம்] என்னும் நடவடிக்கையில் ஆறு இராணுவத்தினர் படுகாயம் அடைந்ததாக சிறிலங்கா ராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன மேலும் தாம் [5 ஆம் பக்கம் பார்க்க]

## துணிவுக்கும் தாக்குதலுக்கும் பெயர்பெற்ற கடற்புலிகள்

### - சிங்கள விமர்சகர் தெரிவிப்பு

(கொழும்பு)

''கடற்புலிகள் துணிவுக்கும், தாக்குதலுக்கும் பெயர்பெற்றவர்கள் புலிகளின் படகுகளை வழிமறித்துத் தாக்கும்போது அவதானத்துடன் நடக்க வேண்டும். இழப்புகள் மத்தியிலும் கடற்புலிகள் செயலாற்றக் கூடியவர்கள். ரோந்துக் கப்பல்கள் மீது றொக்கட் தாக்குதலை நடாத்த கடற்புலிகளின் படகுகள்ரோந்துக் கப்பலில் இருந்து சுமார் 75 மீற்றர் தூரம் வரை நெருங்கி வருவதாக யுத்த முனையிலிருந்து வரும் இராணுவத் தகவல்கள் தெரிவிக்கின்றன''.

இவ்வாறு இராணுவ விமர்சகர் றோகான் குணசேகர ஐலண்ட் பத்திரிகையில் எழுதியுள்ள கட்டுரையொன்றில் தெரிவித்துள்ளார்

அக் கட்டுரையில் மேலும்; திடீரெனத் தாக்கிவிட்டு மறையும் புலிகளின் தந்திரோ [5 ஆம் பக்கம் பார்க்க]

## ஊரடங்கு நீக்கம்

(கொழும்பு)

யாழ். குடாநாட்டில் அமுல் செய்யப்பட்டிருந்த ஊரடங்கு சட்டம் நேற்று பகல் ஒரு மணியுடன் நீக்கப்பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

## மீட்புநிதி சேகரிப்பு

உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக மேற்கொள்ளப்பட்டுவரும் மீட்புநிதி சேகரிப்பு இன்று கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பிற்பகல் 2.30 மணிதொடக்கம் 4.00 மணிவரை கோப்பாய் மகாவித்தியாலயத்திலும், பிற்பகல் 4.30 மணி தொடக்கம் 5 30 மணிவரை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியிலும் மேற்கொள்ளப்படவுள்ளது என தமிழீழ மீட்புநிதிப் பொறுப்பாளர் சொ. வெற்றியரசன் அறிவித்துள்ளார்.

## உளவாளிகள் !!!
## அவதானமாக இருக்கவும்...!

கண்ணால் பார்த்தவற்றை, காதால் கேட்டவற்றை, மனதால் உணர்ந்தவற்றை மற்றவர்க்குக் கூறாது எம் மண்ணைக் காத்திடுவோம்.

# சுருட்டுத் தொழிலாளர்களின் மறியல் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் மூன்று அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து இன்று மாபெரும் மறியல் போராட்டம் ஒன்றை நடாத்தவுள்ளனர்.

இன்று காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும் இம்மறியல் போராட்டத்தின் மூலம் போக்குவரத்துத் தடையை நீக்கும்படியும், பொருளாதார கஷ்டத்தை நீக்கும்படியும், இராணுவத்தை விலக்கி எமது சொந்த இடத்தில் குடியிருக்க விடுமாறும் போக்குவரத்துத் தடையால் சுருட்டுத் தொழிலின் பாதிப்பை வெளிப்படுத்தும் கோஷங்களை முன்வைத்து உதவி அரசாங்க அதிபர் ஊடாக மகஜர் ஒன்று அனுப்பி வைக்கப்படவுள்ளதாக வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

சகல சுருட்டுத் தொழிலாளர்களையும் தங்கள் தங்கள் கஷ்டங்களை வெளிப்படுத்தும் நோக்குடன் சங்கப்பணிமனைக்கு சமுகந்தருமாறு சங்கத் தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## மாசி மக இலட்சார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் சிறி சாயி துர்க்காதேவி ஆலயம் மாசிமக இலட்சார்ச்சனையும், விசேட தேவி ஹோம பெருவிழாவும் இன்று வியாழக்கிழமை தொடக்கம் அடுத்த மாதம் 7 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இத்தினங்களில் அம்பாளுக்கு விஷேட அபிஷேகமும் "இலட்சார்ச்சனை"யும் மாசிமகத் தினத்தன்று காலை நவோதர சத சங்காபிஷேகமும் மாலை இலட்சார்ச்சனை பூர்த்தியும் விசேட திரவியம், நிவேதனம் தானியம் மூலம் ஹோமஆகுதி நிறைவும் அம்பாள் திருவீதி உலா வருதலும் திருவூஞ்சல் முதலியனவும் நிகழும்.


## வரி விளம்பரம்

### அழகிய சாயிபாபா ஸ்ரிக்கர் இனாம்

எம்மிடம் றேடியோ, மணிக்கூடு திருத்தும் வாடிக்கையாளர்கட்கு மூன்று(3) அழகிய சாயிபாபா ஸ்ரிக்கர் இனாமாக வழங்கப்படும். டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமை) யாழ்ப்பாணம் கிளை; இலங்கை வங்கி அருகாமை சாவகச்சேரி (எலெக்ரோனிக் ஓட்டோமற்றிக் கடிகாரங்கள் திருத்துவதில் கைதேர்ந்தவர்கள். (சி-6063)

### பாடல் பதிவு

நீங்கள் விரும்பும் பாடல்களை இப்போது கொம்பக்ட் டிஸ்க் மூலம் பதிவு செய்து பெற்றிட இன்றே வாருங்கள் ஷண் றெக்கோடிங் ஸ்பொட் பஸ்நிலைய வயிரவர் கோவில் அருகாமையில் நவீன சந்தை உட்புறம் யாழ்ப்பாணம். (6068)

### விற்பனைக்கு

சிங்கர் தையல் யந்திரம் (Grade Briton 15 K Reves Model) ஒன்றும், கண்ணாடி பொருத்தப்பட்ட அலுமாரி ஒன்றும் விற்பனைக்குண்டு. 182, கண்டி வீதி, யாழ்ப்பாணம். (சி-6078)

### தென்மராட்சி வாடிக்கையாளர்கட்கு

எங்களிடம் சகலறேடியோக்கள், ரேப் றெக்கோடர்கள், மற்றும் மின்சார உபகரணங்கள் எலெக்றோனிக் ஓட்டோமற்றிக் கடிகாரங்கள் மேசை சுவர் மணிக்கூடுகள் உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்; டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் 3, கண்டி வீதி (இலங்கை வங்கி அருகாமையில்) சாவகச்சேரி. (சி/6082)

### மீட்டல் வகுப்புகள்

**H N.D.A.** (நான்காம் வருடம்) தொழில் நுட்பக்கல்லூரி பிறவுண் வீதி) (பழைய பாடத்திட்டம்) மீட்டல் வகுப்புக்கள் ஆரம்பம்; தொடர்பு, இலக்கம் 140, பலாலி வீதி, திருநெல்வேலி. (4340)

### தேவை

"றெட் றோஸ் பாம்" பராமரிப்பதற்கு தகுந்த ஆள் தேவை தகுந்த சம்பளம் கொடுக்கப்படும் 27-2-93 க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். செருடாவில், வல்வெட்டித்துறை. (சி 6087)


## நிர்வாகிகள் தெரிவு

(கொடிகாமம்)

கொடிகாமம் வர்த்தக சங்கத்தின் 1993 ஆம் ஆண்டுக்கான புதியநிர்வாகசபை தெரிவுக் கூட்டம் அண்மையில் யா/ திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் தலைவர் திரு. ம. சின்னராசாவின் தலைமையில் இடம் பெற்றது. இதில் புதிய தலைவராக திரு. சி. அருணம்பலமும், செயலாளராக திரு எஸ். அருணாசலமும் பொருளாளராக திரு. எஸ். சுப்பிரமணியமும் இவர்கள் உட்பட 9 பேர் நிர்வாக உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டனர். (86)


## அரசாங்க அறிவித்தல்

### சலவைச்சேவை - 1993

(காலம்- 05.03.93 முதல் 31.12.93 வரை)

பொருத்தமானவர்களிடம் இருந்து பின்வரும் இரு தொகுதிகளுக்குமான கேள்விகள் சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளரினால் கோரப்படுகின்றன.

தொகுதி I

மா. வை. வல்வெட்டித்துறை

தொகுதி II

சு. சே. பி. ப. பணிமனை,
மார்புநோய் சிகிச்சை நிலையம்,
மேகநோய் சிகிச்சை நிலையம்.

கேள்விப் பத்திரங்களை 26 2 1993 முதல் எனது பணிமனையில் பெறலாம். இவை 04-03-93 முற்பகல் 10 மணிவரை ஏற்றுக் கொள்ளப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும். கேள்விக்காரர்கள் விரும்பினால் அச்சமயம் சமுகமளிக்கலாம்.

பி. கு:- தொகுதி II க்கான சராசரி துணிகள் 75, மாதம் ஒன்றிற்கு

வைத்திய கலாநிதி பொ. இரத்தினசபாபதி

சு. சே. பி. ப. பணிமனை,
விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்.

பிராந்திய பணிப்பாளர்,
24-02 93
சி-6086)

## விசேட பொதுக்கூட்டம்

வடமாகாண அரசாங்க ஒப்பந்தகாரர் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் வெள்ளிக்கிழமை (26-2-1993) காலை 11.00 மணிக்கு நடைபெறும். சகல அங்கத்தவர்களும் தவறாது சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

காங்கேசன்துறை வீதி,
தாவடிச் சந்தி,
தாவடி.

செயலாளர்
மு. சி. சண்முகராசா
(சி/6083)

### யாழ். பல்கலைக்கழகம்

## யாழ். பல்கலைக்கழக ஆய்வுநூல்களின் விற்பனை

யாழ். பல்கலைக்கழகம் தனது ஆய்வுகளைப் பிரசுரங்களாக வெளியிட்டு அவற்றை விற்பனை செய்து வருகின்றது. இதனடிப்படையில் பின்வரும் வெளியீடு யாழ். பல்கலைக்கழக நிர்வாகக் கிளையில் விற்பனைக்குள்ளது.

1. அரசியல் தொடர்புகளும் தேர்தல் நடைமுறைகளும் (Political communication and the Electoral Process) கலாநிதி எஸ். கே. எஸ். நாதன்

பிரதி ஒன்று ரூபா 35/- சாதாரண தபால் செலவு ரூபா 4/- இதனை தபாற்கட்டளை/காசுக்கட்டளை ஆகியவற்றை அனுப்பி தபால் மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலம் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் சாதாரண தபாற்செலவை மேலதிகமாகச் செலுத்துதல் வேண்டும்.

தபாற்கட்டளை/காசுக்கட்டளை நிதியாளர். யாழ் பல்கலைக்கழகம் என்ற பெயரில் இருத்தல் வேண்டும். வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும். வியாபாரிகள் நிதியாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பதிவாளர்

(சி-6072)


## ஆங்கிலமொழி கற்பிப்பு பட்டப்பின் படிப்பு டிப்புளோமா

ஆங்கில மொழி கற்பித்தல் பட்டப்பின் படிப்பு டிப்புளோமா மற்றும் ஆங்கில மொழி கற்பித்தல் டிப்புளோமாக் கற்கை நெறிகள் மார்ச் மாதம் 7 ஆம் திகதி யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஆங்கில மொழி கற்பித்தல் பட்டப்பின் படிப்பு டிப்புளோமாவுக்கு ஏழு பேரும், ஆங்கில மொழி கற்பித்தல் டிப்புளோமாவுக்கு 18 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் அடங்கிய பட்டியல் கலைப் பீடாதிபதி அலுவலகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்டவர்கள் தமது பெயர்களைப் பதிவு செய்யும்படி கலைப் பீடாதிபதி பொ. பாலசுந்தரம்பிள்ளை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புதிய நெகிழ்ச்சி முறையில் முழுநேரக் கற்கை நெறியாக இந்த மேற்படிப்புக்கள் நடைபெறவிருப்பது குறிப்பிடத்தக்கது. இதற்கான ஒத்துழைப்பை யாழ் கல்வித் திணைக்களம் வழங்க இருப்பதாகவும் கலைப் பீடாதிபதி தெரிவித்தார்.

## தீக்கிரை

கரவெட்டி வடக்கு இடைக்குறிச்சியில் கடந்த திங்கட்கிழமை இரவு குடிசை ஒன்று தீ கிரையானது மு ஆனந்தன் என்பவரது குடிசையே தற்செயலாக தீக்கிரையானதாக தெரிவிக்கப்படுகிறது (யோ)


## நினைவு கூருகின்றோம்... 1993-02-25

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டு - கொக்கட்டிச்சோலைப் பகுதியில் பாம்பு கடித்ததில் எமைப் பிரிந்த -

துமிலன் (சின்னத்தம்பி விஜயகுமார் - அரசினர் பண்ணை, கரடியனாறு - மட்டு.)

1987 ஆம் ஆண்டு வவுனியா - மன்னார் வீதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

கந்தையா செல்வம் (கிருஷ்ணபிள்ளை வரதராசா -தண்டுவான், நெடுங்கேணி - மணலாறு)

1989 ஆம் ஆண்டு வவுனியா - கோயில்குளம், கல்வீரன்குளம், ஆதிகுளம், சிதம்பரபுரம், சலம்பமலைப் பகுதிகளில் தேசவிரோதக் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 4 தமிழிளைஞர்கள்.

1991 ஆம் ஆண்டு மட்டு - ஏறாவூர்ப் பகுதியில் முஸ்லிம் ஊர்காவற்படையினரின் காவலரண் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

லெப், விகடன் (—யோகராசா - ஏறாவூர் - 05 - மட்டு.)

வவுனியாவில் எதிர்பாராத விதமாக இராணுவ எல்லைக்குள் சென்றபோது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

மேஜர் செங்கதிர் (நடேசு ரஞ்சிதவரதராசா-இடைக்குறிச்சி, கரவெட்டி வடக்கு - யாழ்)

சிந்து (ரகுநாதன் சரவணபவன் - சங்குவேலி, உடுவில்- யாழ்.)

1992 ஆம் ஆண்டு கிளிநொச்சி - பூநகரியில் அமைக்கப்பட்டிருந்த சிறிலங்கா இராணுவமுகாம்களுக்குப் பாதுகாப்பாக சித்தன்குறிச்சிபகுதியில் அமைக்கப்பட்டிருந்த காவலரண்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

லெப். காந்—மதுரம் (வேலாப்போடி உதயகுமார்- வீரபத்திரர் கோயிலடி, 5-ம் குறிச்சி. ஏறாவூர் - மட்டு.)

யாழ் - விமன்காமம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது விழுப்புண் அடைந்திருந்து யாழ். மருத்துவமனையில் வீரச்சாவெய்திய -

லெப். சுரேஷ் (சின்னத்துரை தயாபரன் - 4-ம் வட்டாரம், மண்டைதீவு - யாழ்.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/6079)

# இரகசிய கூட்டணி எதையும் ஏற்கப் போவதில்லை

**: அனுரா**

(கொழும்பு)

கட்சி அமைப்பாளர்களினதும் பாராளுமன்றக் குழுவினதும் சம்மதமின்றிச் செய்யப்படும் எந்த இரகசிய கூட்டையும் தானும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் உள்ள பெரும்பான்மை உறுப்பினர்களும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லையென்று கம்பகாமாவட்ட எம். பியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அகில இலங்கை அமைப்பாளருமான அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளரான தர்மசிறி சேனாநாயக்காவிற்கு எழுதியுள்ள கடிதத்திலேயே அனுராபண்டாரநாயக்கா மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார். இக் கடிதத்தின் பிரதிகள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் எம். பிக்களுக்கும் கட்சி அமைப்பாளர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

## தமிழ்மொழி பயன்படுத்தாவிடின் ஒழுங்கு நடவடிக்கை

**- மட்டு. அரச அதிபர் அறிவிப்பு**

(மட்டக்களப்பு)

தமிழ் மொழியைப்பயன்படுத்தத்தவறும் அரச அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என மட்டக்களப்பு அரசாங்க அதிபர் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட அரச அலுவல்களில் தமிழ் மொழி கண்டிப்பாக அமுல் செய்யப்படல் வேண்டும் என அரச அதிபர் ஆர். மௌனகுருசாமி பணிப்புரை விடுத்துள்ளார். அங்குள்ள சகல திணைக்கள தலைவர்கள், உதவி அரச அதிபர்கள் செயலக பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கு இது தொடர்பான கடிதங்களை அரச அதிபர் அனுப்பிவைத்துள்ளார்.

இம்மாவட்ட அரச திணைக்களங்களில் தமிழ் மொழி சரியாக அமுல் செய்யப்படவில்லை என்ற புகார்கள் கிடைத்ததை அடுத்தே அரச அதிபர் இந் நடவடிக்கையை எடுத்துள்ளார்.

## கல்வி தமிழரின் சொத்து ஒருபோதும் அழிக்கமுடியாது

**-இரா. சுந்தரலிங்கம்**

(வடமராட்சி)

எதிரி தமிழ் மக்களின் சகல செல்வங்களையும் அழித்தாலும் யாழ். மாணவர்களின் கல்விச் செல்வத்தை ஒருபோதும் அவனால் அழிக்க முடியாது.

இவ்வாறு வல்வை மகளிர் கல்லூரியில் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெற்ற இல்ல மெய்வல்லுனர் போட்டியின்போது யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது மண்ணில் இருந்து கல்வி கற்று பட்டதாரியாவதை விட எமக்கு வேறு இன்பங்கள் எதுவுமில்லை. கல்வியைத் தொடராமல், கல்வி அறிவின்றி வெளிநாடுகளுக்கு போவது கோழைத்தனமானது. கல்வி அறிவு இலாதவன் வாழ்வு இருட்டறை போன்றது.

வடமராட்சி மண்ணைச் சேர்ந்த மக்கள் வீரம், கல்வி, செல்வத்தை வளர்த்தவர்கள். இப்பகுதியைச் சார்ந்தவர்கள் சிறந்த கல்வி ஆற்றலைக் கொண்டவர்களாக உள்ளனர். தமிழீழ விடுதலைத் தேசிய தலைவரைப் பெற்றதும் இந்த மண்ணே என்றார்.

மற்றும் விளையாட்டுப் போட்டியின்போது தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ கல்விக்கழக பொறுப்பாளர் திரு. இளங்குமரனும், பாடசாலைக் கொடியை பிரதம விருந்தினர் திரு. இரா சுந்தரலிங்கமும் ஏற்றி வைத்தனர்.

நளாயினி இல்லம் முதலாமிடமும், அருந்ததி இல்லம் இரண்டாம் இடமும், சாவித்திரி இல்லம் மூன்றாம் இடமும் முறையே பெற்றுக்கொண்டன. வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பிரதம விருந்தினர் திரு. இரா. சுந்தரலிங்கம் பரிசில்களை வழங்கி கௌரவித்தார். [யோ]

## சு. கட்சி திட்டம்

(கொழும்பு)

சர்வதேச மகளிர் தினத்தன்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி இதர எதிரணியினருடன் சேர்ந்து மகளிர் ஆர்ப்பாட்டமொன்றை கொழும்பில் நடத்தவுள்ளது.

மகளிர் தினமான எதிர்வரும் 8ஆம் திகதி வெலிசறையில் இந்த ஆர்ப்பாட்டம் நடக்குமென சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அறிவித்துள்ளார்.

பெண்களுக்கு இன்றைய சமூகத்தில் இழைக்கப்பட்டுள்ள பலவகையான அநீதிகள் குறித்து போராட்டத்தில் கோஷம் எழுப்புவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

சகல இன மதங்களையும் சேர்ந்த மகளிர்களை இந்த ஊர்வலத்தில் பங்குகொள்ளுமாறு சிறிமா கோரிக்கை விடுத்துள்ளார்.

## கலந்துரையாடல்

கொடிகாமம் பிரதேசத்தில் உள்ள சனசமூக நிலையங்களுக்கான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் கொடிகாமம் வட்டப் பொறுப்பாளர் திரு. விமல் தலைமையில் நடைபெறும். இதில் அனைத்து சனசமூக நிலையங்களின் நிர்வாக உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வட்டப் பொறுப்பாளர் கேட்டுள்ளார். [86]


# அறிவித்தல்

**வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிராமிய வங்கியில் கணக்கு வைத்திருக்கும் சகல அங்கத்தவர்கட்கும்**

25-02-93 ஆம் திகதியிலிருந்து 15-03-93 ஆம் திகதி வரை தங்கள் வசமுள்ள வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிராமிய வங்கி சேமிப்புக் கணக்குப் புத்தகத்தை யாழ். காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள கிராமிய வங்கியின் முகாமையாளரிடம் சமர்ப்பித்து சேமிப்பு மீதிகளைச் சரிபார்த்துச் சீர்செய்து கொள்வதுடன் தங்களின் தற்போதைய பெயர், விலாசங்களைக் கிராமிய வங்கி முகாமையாளரிடம் தெரிவிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

பொதுமுகாமையாளர்

வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

(இ/6084)


## 2-ம் ஆண்டு நினைவுநாள்

தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி தலைமைச் செயலக செயற்குழு உறுப்பினரும், பிரசாரப் பொறுப்பாளருமான

### "மேஜர்" செங்கதிர் (நடேஸ் இரஞ்சிதவரதராசா)

அவர்கள்

| வீரஜனனம் | வீரச்சாவு |
|---|---|
| 1959-05-19 | 1991-02-25 |

ஓ! செங்கதிரே - நீ
எங்கள் மண்ணில்
செம்மைக்காய்
உதிர்ந்து விதையாகினாய்

உனது உரை வீச்சு உரத்துக் கேட்கிறது
அன்பும் அறிவும் ஆற்றலும்
அடங்காத சுதந்திரதாகமும்
என்றும் நினைவுக் களங்களில் விரிந்துநிற்கும்

தீச்சுவாலை கொழுந்து விடும்
எதிரிகளைச் சுட்டெரிக்கும்
ஒவ்வொரு கணப் பொழுதுகளும் - உன்
பெயர் கூறி நிற்கும் - அதனால்
நீ மறையவில்லை - என்றும்
எம்முன் இருப்பாய் ............

இவருடன் உறுதுணையாய்ச் சென்ற வீரவேங்கை சிந்து மற்றும் மாவீரர்களுக்கும் எமது வீரஞ்சலியை செலுத்துகின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கிறோம்.


25-02-93 இன்று எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்தில்சகபோராளிகள், நண்பர்கள்,உறவினர்களை கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

இடைக்குறிச்சி
கரவெட்டி.

"மேஜர்" செங்கதிர்
குடும்பத்தினர்

(4328)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
15-07-1923

உதிர்வு
08 04-1992

திதி: 25 - 02 - 1993

### அமரர் திரு. கதிரன் - முருகன்

பரந்தாமன் திருவடியில் சரணாகும் உன்
ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்
சாந்தி...சாந்தி...சாந்தி...!

உங்கள் பிரிவால் துயருறும்

வன்னியசிங்கம் வீதி,
கைதடி வடக்கு.
கைதடி.

பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்
உற்றார், உறவினர்கள்

(4329)


# பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்கு வெற்றிடங்கள் உள்ளன.

1. தன்னியக்க பிளேட்டன் இயக்குநர்
   Automatic Platen Machine Minder
2. தன்னியக்கமற்ற பிளேட்டன் இயக்குநர்
   Semi Automatic Platen Machine Minder
3. தன்னியக்க சிலிண்டர் இயக்குநர்
   Automatic Cylinder Machine Minder
4. தன்னியக்கமற்ற சிலிண்டர் இயக்குநர்
   Semi Automatic Cylinder Machine Minder
5. வெட்டு இயந்திர அனுபவத்துடன் கூடிய புத்தகம் கட்டுபவர்கள் (Binders)
6. இலக்கமிடுதல், கோர்த்துக்கட்டுதல் (Binders) முதலிய வேலைகளில் அனுபவமுள்ளோர்
7. அச்சுக்கோப்பாளர்கள்

தகுதியுடையோர் அனுபவச்சான்றுகளுடனும் சுயவிபரங்களுடனும் 28-02-93 ஞாயிறு காலை 9-00 மணிக்கு நேரில் வரவும்

81, மகேந்திராவீதி.
யாழ்ப்பாணம். (இ)

**பொது முகாமையாளர்**
ஈழநாதம்

## சனிமாற்றம்

5-03-93இல் நிகழும்
சனிமாற்றம் உங்களுக்கு நன்மைபயக்குமா?
பன்னிரு ராசிகளுக்கும் ஒரே புத்தகமாக விற்பனையாகின்றது.

**விலை ரூபா:- 12.00 மட்டுமே**

விபரங்கட்கு:- திருக்கணித நிலையம் மட்டுவில், சாவகச்சேரி.

(3382)

## 45-ம் நாள் நினைவஞ்சலி!



வீரப்பிறப்பு:
10. 04. 71

வீரச்சாவு:
09. 01. 93

### லெப். குறளமுதன் (விமல்)

(சித்திரவேல் சந்திரகாந்தன்)

சித்திரமே! குறளமுதா எங்கு சென்றாய்
பூவிரிந்த நிலவு போலத் திகழும் நல்ல
பொன் முகத்தின் விழிசிவக்கக் களத்தே சென்றாய்
பாவியராய்! திரண்டெழுந்த படைஞர் தம்மைப்
பதைபதைக்கப் படுகளத்தே சிதைத்து வென்றாய்
ஆவி, உடல், செயலனைத்தும் விடுதலைக்காய்
அர்ப்பணித்து அண்ணனிட்ட பணியில் நின்றாய்!
சாவதனை வென்றமா வீரனானாய்!
சரித்திரமே குறளமுதா எங்கு சென்றாய்?

கொக்குவில் திருமலைத் தொடர்பகம்

(சி 6075)

## இலட்சார்ச்சனை

(தொல்புரம்)

அருள்மிகு பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் லட்சார்ச்சனை விஞ்ஞாபனம் நடைபெறவுள்ளது.

மேற்படி இலட்சார்ச்சனை பொன்னாலை பதியில் கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீதேவி, பூமாதேவி சமேத ஸ்ரீவரதராஜப் பெருமாளுக்கு இன்று வியாழக்கிழமை தொடக்கம் ஆறாம் திகதி சனிக்கிழமை வரையும் நடைபெறவுள்ளதென தெரிவிக்கப்படுகிறது. (36)

## கடற்படை நடமாட்டம்

(சுன்னாகம்)

புளியந்துறைக்கடற்பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை மீன்பிடிக்க சென்றமீனவர்கள் கடற்படையினரின் நான்கு கப்பல்களை கண்டு பதற்றமடைந்து தொழில் செய்யாது திரும்பினர். தாம், கடலில் மீன்பிடித்துக் கொண்டிருப்பதை அவதானித்த கடற்படையினர் தம்மை நெருங்க முயலவே, கட்டுமரங்கள், வலைகளை கைவிட்டு கரை திரும்பிவிட்டதாக மீனவர்கள் கூறினர். கடற்படையினர் நடமாட்டம் குறைந்ததும் மீனவர்கள் தம் தொழிலுபகரணங்களை மீள எடுத்து வந்தனர். (11), (09)

## உற்சவம் ஆரம்பம்

(வடமராட்சி)

பொலிகண்டி கிழக்கு சல்லியம்பதி வீரகத்தி விநாயகராலய உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை காலை10 15 மணியளவில்கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி மார்ச்6ஆம் திகதி தேர் உற்சவமும், மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

இவ் ஆலயம் இம்முறையே உற்சவத்தை ஆரம்பித்துள்ளது. (யோ)

## பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலை அபிவிருத்திச் சபை

## அறிவித்தல்

சபையின் உறுப்பினர்கள் தமது உறுப்புரிமையை நீடிக்கச் சந்தாப்பணத்தைச் செலுத்துமாறும், புதிய உறுப்பினர்களாகச் சேர விரும்புபவர்கள் சந்தாப் பணத்தைச் செலுத்தி உறுப்பினர்களாக சேர்ந்து கொள்ளுமாறும் (ஆண்டுச்சந்தா 50 ரூபா, ஆயுள் சந்தா 500 ரூபா) இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

டாக்டர் சி. கதிரவேற்பிள்ளை,
தலைவர்.

க. வ. செல்வராஜன்,
செயலாளர்.

அபிவிருத்திச்சபை,
பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலை. (சி-6085)

## பதவி வெற்றிடங்கள்

1 ஆண், பெண் இருபாலாருக்கும் நவீன டிசைன்களில் ஆடைகள் தைப்பதற்கும்.

2. பாடசாலை மாணவர்களுக்குரிய பாக்குகள் தைப்பதற்கும் ஆட்கள் தேவை

அனுபவமுள்ளவர்கள் சான்றிதழ்களுடனும் சுய விபரங்களுடனும்

01. 03. 93 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நேரில் வரவும். அன்றேல் பின்வரும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்

விளம்பர இல. 184
ஈழநாதம்,
81, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-6073)


தற்போது நிலவும் வெம்மையைப் போக்கி குளிர்ச்சியைத் தருகிறது

ரேஸ்ரியின் "நெல்லிரசம்"

இரு அளவுகளில் உங்கள் கைகளில் தவழவிடப்பட்டுள்ளது.
இன்றே விரைந்து உங்கள் வியாபாரிகளிடம் கேட்டு வாங்கிடுவீர்.

உங்கள் எதிர்காலம் சிறக்க சேமியுங்கள்



TASTY அறிமுகப்படுத்தும் பெரியஜாம்போத்தல்கள்

இதை வாங்குவதால் உங்கள் கைகளில் 20%

450g போத்தலின் இரு மடங்கு
450g இன் விலை 50/-
900g இன் விலை 80/- மட்டுமே

உங்கள் வியாபாரிகளிடம் கேட்டு வாங்கிடுவீர்

Tasteline Industries (Pvt) Ltd
14, SEENIOR LANE, JAFFNA.

முகவர்: அறிவகம், கண்டிவீதி, சாவகச்சேரி.

(சி6080)

சிந்தனைக்கு

நோயைத் தொடக்கத்திலேயே குணப்படுத்து.
கடனைச் சிறிதளவு இருக்கும்போதே செலுத்திவிடு.

- திபெத் பழமொழி.


ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 25 - 02 - 1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண் - 05


# யாழ். பல்கலையின் பேரில் ஒரு மோசடி

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் மனித உரிமைகள் குழு என்ற ரீதியில் கொழும்பிலிருந்தும் லண்டனிலிருந்தும் ஒரு குழுவினரால் தொடர்ச்சியாக பல அறிக்கைகள் வெளியிடப்பட்டவண்ணமுள்ளன. யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்களின் பேரில் இவ் அறிக்கைகள் வெளிவருவதினால் இதற்கு சர்வதேச மட்டத்திலும் செய்தித்தொடர்புச் சாதனங்கள் மட்டத்திலும் குறிப்பிடக்கூடிய முக்கியத்துவம் கிடைக்கப்பெறுகின்றது.

ஆனால் யாழ். பல்கலைக்கழகத்தின் பெயரால் இவ் அறிக்கைகளை வெளியிடுபவர்கள் யார்? இவர்களுக்கும் யாழ். பல்கலைக்கழகத்துக்கும் என்ன தொடர்பு உள்ளது? இவ்வாறு ஓர் அமைப்பு தற்பொழுது யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர்மட்டத்தில் உள்ளதா? அவ்வாறு இல்லாவிடில், இவ்வாறானதொரு மோசடியை யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்கள் ஏன் பார்த்துக்கொண்டு மௌனமாக இருக்கின்றார்கள்?

இது தொடர்பாக நாம் அறிந்த வரையில் யாழ் பல்கலைக் கழகத்திலிருந்துவெளியேறிய ஒருசிலரே இவ்வறிக்கைகளுக்குப் பொறுப்பாக இருப்பதாகத் தெரியவருகின்றது. இதேவேளை யாழ். பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில் இவர்களின் அறிக்கைக்கும் தமக்கும் எதுவித தொடர்பும் இல்லை என சில மாதங்களுக்கு முன் உள்ளூரில் அறிக்கை ஒன்றின்மூலம் மறுத்ததுடன் தமது கடமை முடிந்து விட்டது என எண்ணியிருப்பதுபோல் தெரிகிறது.

ஆனால் இவ்விவகாரம் இன்று சர்வதேச மட்டத்தில் பேசப்படுவதினால், யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்களும் இது குறித்து சர்வதேச மட்டத்தில் தமது நிலைப்பாட்டைத் தெரிவிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அவ்வாறு இல்லாவிட்டால் யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்களின் பெயரில் சர்வதேசமட்டத்தில் மேற்கொள்ளப்படும் ஒரு மோசடிக்கு இவர்களே அனுமதியளித்துள்ளார்கள் எனப் பொருள் கொள்ளப்படுவதில் தப்பேதும் இல்லை.

இந்நிலையில் யாழ். பல்கலைக் கழக ஆசிரியர்கள் சர்வதேச மனித உரிமை ஸ்தாபனங்கள், மனிதநேய ஸ்தாபனங்கள். உலக நாடுகளின் தூதுவராலயங்கள், வசதி ஏற்படின் சர்வதேச செய்திஸ்தாபனங்கள் என்பனவற்றின் ஊடாக இதனை மறுக்க முன்வரவேண்டும். அப்பொழுதே இம்மோசடிக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கமுடியும்.

இதேவேளை மனித உரிமைகள் குழு எனக் கூறிக்கொண்டு மோசடியில் ஈடுபடும் இக் குழுக்கள் பற்றி சர்வதேச மனித உரிமைக்குழுக்களும் ஏனைய அமைப்புக்களும் கவனத்திற்கொள்ளவேண்டும்.ஒரு பெரிய அமைப்பின் பெயரில், ஒரு சிலர் புரியும் மோசடியை விளக்கிக்கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால், மாறாட்டங்களில் ஈடுபடும் இக்குழுக்களினால் இவ் அமைப்புக்களும் அவப் பெயர்களையே சம்பாதிக்கவேண்டிவரும்.

# கண்கட்டப்பட்ட நிலையில் 24 மணி நேரம் இருந்தேன்

## விடுவிக்கப்பட்டவர் தகவல்

(வடமராட்சி)

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமில் இருபத்து நான்கு மணித்தியாலங்கள் எனது இரண்டு கண்களும் கட்டப்பட்ட நிலையில் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைக்கும் விசாரணைக்கும் உட்படுத்தப்பட்டேன்.

இவ்வாறு கடந்த ஞாயிற்றுக்கிழமை 21 ஆம் திகதி விறகு தேடச் சென்ற போது சுளிபுரம் பறாளாய்ப் பகுதியில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு மூன்று நாட்கள் தடுத்து வைக்கப்பட்டு நேற்று விடுவிக்கப்பட்ட சின்னக்கிளி அரியபுத்திரன் (வயது 13) என்ற மாணவன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது நான் காரைநகரை வசிப்பிடமாகக் கொண்டிருந்தேன். எனது பெற்றோருடன் சுளிபுரம் பகுதியில் அகதிகளாக இருந்துவந்தேன்.

வீட்டுச் சமையல் தேவைக்கு விறகு தேவைப்பட்டதால் சின்னவன் ஐயன் என்பவருடன் பறாளாய்ப் பகுதிக்கு விறகு தேட சென்ற வேளையில் அங்கு எமக்கு தெரியாமல் பற்றைகளுக்குள் மறைந்திருந்த சிறிலங்கா இராணுவம் துப்பாக்கி வேட்டின் மத்தியில் எங்களை கைது செய்தது.

எம்மை இராணுவம் கைது செய்ததும் பலமாக கைகளாலும் கால்களாலும் தாக்கியது மட்டுமல்லாமல் கெட்ட வார்த்தைகளாலும் தூசித்தது. எம்மை கைது செய்த அன்று மாதகல் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தோம்.

மறுநாள் கண்கட்டிய நிலையில் எங்கள் இருவரையும் வாகனம் ஒன்றில் ஏற்றி பலாலி இராணுவ முகாமுக்கு கூட்டிச் சென்றனர்.

அங்கே ஒரு நாள் பூராவும் கண்கட்டப்பட்ட நிலையில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டபோது நான் அகதியாக வந்திருப்பதாகவும், சுளிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் மாணவன் எனவும் தெரிவித்தேன். பின்னர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை எங்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகளிடம் ஒப்படைத்தனர் என்றார். (யோ)

# கடற்படை அண்மித்ததும் மூவர் கடலில் குதித்தோம்

## கிளாலியில் தப்பிவந்தவர் தெரிவிப்பு

[கொடிகாமம்]

''கடற்படையினரின் படகு எம்மை நெருங்கியதும் நான் கடலில் பாய்ந்தேன். என்னுடன் வேறும் இருவர் கடலில் பாய்ந்தனர். உடனே சரமாரியான வெடிச்சத்தங்கள் கேட்டன''

இவ்வாறு கடந்த திங்களன்று கிளாலி கடல் நீரேரியில் கடற்படையினர் நடாத்திய தாக்குதலின் போது தப்பி வந்த படகோட்டியான அமிர்தலிங்கம் உதயகுமார் [வயது 17, போரணை, பளை] என்பவர் தெரிவித்தார். இவருடன் பயணம் செய்த சிவானந்தன் [கோயில்வயல், பளை], சிவம் [இயக்கச்சி] ஆகியோர் பூநகரி கரையை அடைந்துள்ளதாகவும், அன்ரன் [வயது 36, பண்டிதர் குடியிருப்பு] படகுச் சொந்தக்காரர் கி. கனகராசா [சங்கத்தார்வயல்) என்பவருக்கும் என்ன நடந்தது என்பது தெரியவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அவர் மேலும் தெரிவிக்கையில்; ''நான் கடலில் குதிக்கும் போது இரவு சுமார் 7-45 மணி இருக்கும். சுமார் 20 மைல் தூரம் நீந்தி சுருக்காய் தீவை அண்மித்தபோது அங்கு வெளிச்சம் காணப்பட்டது. அத்துடன் அங்கிருந்து துப்பாக்கிச் சூடும் நடாத்தப்பட்டது.

அங்கிருந்து திரும்பவும் நீந்தி செவ்வாய்க்கிழமை பகல் 12 மணியளவில் அறந்த வெளியில் கரை சேர்ந்தேன். அப்பொழுது போராளி ஒருவர் என்னைக் கண்டு கூட்டிச் சென்று உணவுவகைகள் தந்து தேற்றியபின் என்னை அனுப்பிவைத்தார்'' என்றார். [86]

கூட்டுறவுச்

செய்யும் நோக்குடன் கூட்டுறவுச் சங்கங்கள் செலுத்திய பணத்தினைக் கொண்டு மேற்படி ஒழுங்குகளை அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருடாக யாழ். அரசஅதிபர் மேற்கொண்டுள்ளதாக தெரியவருகின்றது. இவ்வறிவித்தலை நேற்று முன்தினம் யாழ். அரச அதிபர் யாழ். செயலகத்திற்கு அனுப்பிவைத்துள்ளார். (பா)

'யுத்தகள'

முன்னேறிய இடங்களில் இருந்து பின்வாங்கி பழைய நிலைகளுக்கு திரும்பிவிட்டதாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இராணுவ

றுக்கிழமை சுளிபுரம், பறாளாயில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு பலாலி முகாமில் மூன்று தினங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த காரைநகரைச் சேர்ந்த சின்னன் ஐயன் [வயது 58], சின்னக்கிளி அரியபுத்திரன் [வயது 13] ஆகியோருமே விடுவிக்கப்பட்டு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரின் அனுசரணையுடன் கூட்டிவரப்பட்டனர்.

இவர்கள் பருத்தித்துறை சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அலுவலகத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். ஊரடங்கு நீக்கப்பட்ட பின்னரே இவர்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படுவர் என தெரியவருகிறது.

இதேவேளை இக்கப்பலில் இருந்த நான்கு கன்னியாஸ்திரிகளை கப்பலில் இருந்து இறங்க கப்பல் அதிகாரி அனுமதி மறுத்துவிட்டார். பல மணி நேரங்களின் பின்னர் குடமையின் நிமிர்த்தம் கப்பலுக்குச் சென்ற யாழ்.செயலக புனர்வாழ்வுப் பிரிவைச் சேர்ந்த திரு. பதிமநாதன் பொறுப்பேற்று அவர்களை கப்பலிலிருந்து இறக்கினார்.

[யோ].[30]

துணிவுக்கும்

பாயத்திற்கு களத்தில் களைத்துப்போய் நிற்கும் இராணுவத்தினர் இலகுவில் பலியாகின்றனர். புலிகளின் இந்தத் தாக்குதல்களினால் இளைஞர்கள் இராணுவத்தில் சேர பின்நிற்கிறார்கள். சண்டையினால் ஏற்படும் இழப்புகளுக்கு உண்மையில் இராணுவம் தான் தாக்குப் பிடிக்க வேண்டியுள்ளது. இதனால் இராணுவத்தைவிட இழப்புகள் குறைவாக ஏற்படும் ஏனைய பாதுகாப்புப்படை சேவைகளில் சேரவே இளைஞர்கள் விரும்புகிறார்கள் என்று இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி றோகான் குணசேகரா மேலும் எழுதியுள்ளார்.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடாத்துவதன் மூலம் புலிகளைத் தடுமாற வைக்க முடியும். ஆனால் வளங்கள் இல்லாதிருக்கும் போது அதற்கான ஒரு திட்டத்தை எம்மால் தயாரிக்க முடியாது.

புலிகளுக்கு எதிரான கடுமையான இராணுவ நடவடிக்கையினால் ஏற்படும் உயிரிழப்புகளும் இராணுவத் தளபாடங்களின் அழிவும் தாழ்வு ஏற்படுத்தும் வகையில் அதிகமான நஷ்டத்தை ஏற்படுத்தக் கூடியவை. இந்நிலை தொடரும் பட்சத்தில் வளங்கள் குறைந்து இராணுவத்திட்டமிடல் பாதிப்படையும் எனறோகான் குணசேகரா மேலும் குறிப்பிடுகிறார்.

மேலும் கடந்த ஆண்டில் மாஓயாப் பகுதியின் பாதுகாப்பை விமானப் படையிடம் ஒப்படைத்தபோது விமானப் படையினர் மலர் சிறிலங்கா விமானப்படையினை விட்டு ஓட்டம் பிடித்தனர்.

குறைகுறையான பயிற்சியுடன் யுத்த முனைக்குச் செல்லும் படைவீரர் மற்றும் ஓய்வின்றிச் சண்டை செய்யும் படைவீரர்களைப் பற்றிய கதை உடம்பை உறைய வைக்கிறது. கடந்த ஆண்டு நத்தார் பண்டிகை காலத்தில் 42 இராணுவத்தினர் புலிகளின் அதிரடித்தாக்குதலினால் கொல்லப்பட்டனர். அதே காலப்பகுதியில், அப்பகுதியில் நிலக்கண்ணிவெடிகளை, வீதியில் அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த 21 இராணுவத்தினர் புலிகள் மறைந்திருந்து மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

நாங்கள் கவனமில்லாது நடந்தால் இது போன்ற இழப்புகளை இந்த ஆண்டிலும் சந்திக்க நேரிடும் என்று ஓர் இராணுவ அதிகாரி எச்சரித்துள்ளார். இவ்வாறு ''ஈழயுத்தத்தில் விமானப்படை பலம்'' என்ற கட்டுரையில் றோகன் குணசேகரா மேலும் குறிப்பிடுகிறார்.

கைப்பற்றிய

லாக்குவதும். தளர்த்துவதும் இப்பகுதி மக்களைப் பொறுத்து ஒன்றுதான்.

இதேவேளை கிழக்கு மாகாணத்தில் மேலும் சிறியளவிலான தாக்குதலை அரசு மேற்கொள்ளுவதற்கு ஆயத்தம் செய்வது போல தெரிகின்றது. கிழக்கில் அரசு தனது அதிகாரத்தை நிலை நிறுத்துவதில் அக்கறை கொண்டுள்ளது. ஆனால் கிழக்கில் உண்மையில் பகலில் அரச பாதுகாப்பு படையின் கட்டுப்பாடும், இரவில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாடுமே நிலவுகின்றது. இது தற்போதைய கிழக்குமாகாண நிலை என்றும் தெரிவித்தது.

## கைப்பற்றிய ஆயுதங்கள்

| | | | |
|---|---|---|---|
| ஃ பராஷைட் | — 04 | ஃ தண்ணீர்க்கான் | — 06 |
| ஃ சிறிய கிளைமோர் | — 02 | ஃ தண்ணீர்க்கான் கோல்சர் | — 02 |
| ஃ கெல்மட் | — 04 | ஃ மிலிற்றி பெல்ட் | — 07 |
| ஃ கிட்பாக் | — 05 | ஃ மிலிற்றி சப்பாத்து சோடி | — 22 |
| ஃ வயர்ரோல் | — 01 | ஃ சிவில் சப்பாத்து சோடி | — 10 |
| ஃ மழைக்கவசம் | — 01 | ஃ சாப்பாட்டுப் பெட்டி | — 02 |
| ஃ தொலை நோக்கி | — 01 | ஃ சாப்பாட்டுப் பெட்டி கோல்சர் | — 02 |
| | | ஃ ''டெக்'' | — 01 |
| | | ஃ சிறிய அம்பிலிவயர் | — 01 |

நல்லூர் ... யாழ்ப்பாணம்

## மதுருஓயாவில் வீரச்சாவு



லெப். மோட்சன் (ஜெயசீலன்)



2-ம் லெப். கதிரவேல் (வாமதேவன்)

# தடையை மீறி ஊர்வலம் நடாத்த பா. ஜனதா உறுதி

## 70ஆயிரம் படை டில்லியில் குவிப்பு

(டில்லி)

இந்தியாவில் பொதுத்தேர்தல் நடாத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி இன்று அரசுக்கெதிரான மாபெரும் பேரணி ஒன்று நடைபெறஉள்ளது

இப்பேரணியை அரசு தடை செய்துள்ள போதிலும் பேரணியில் தமது தொண்டர்களைக் கலந்து கொள்ளும்படி பாரதிய ஜனதாக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இன்று அதிகாலை 5 30மணிக் குறிப்பிட்ட ஐந்து இடங்களில் ஒன்று கூடுமாறு இக்கட்சி கோரியுள்ளது

இப்பேரணியையொட்டி டில்லியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே லட்சக்கணக்கான மேற்படி கட்சித் தொண்டர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சுமார் எழுபது ஆயிரம் பராமிலிட்டறிப் பொலிசார் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டுள்ளனர். ஏறத்தாழ முற்றுகை நிலையில் தலைநகரம் உள்ளது.

## வீரச்சாவு



லெப். கங்காதரன்

பூநகரி - பள்ளிக்குடா பகுதியில நடந்த திங்கள் அதிகாலை 12.45 மணியளவில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட மோதலில் விடுதலைப் புலிகளைச்சேர்ந்த போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

லெப். கங்காதரன் - கங்கா (கண்ணையா - முத்துக்குமார், பாரதிபுரம், மடடக்களப்பு) என்பவரே வீரச்சாவடைந்தவராவார். இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவிக்கின்றனர்.

## மாவீரர் உருவப்படங்கள் வெளியிடப்பட்டுள்ளன

பன்னிரண்டு மாவீரர்களின் உருவப் படங்கள் நேற்று முன்தினம் தமிழீழ மாவீரர் பணிமனையினால் வெளியிடப்பட்டுள்ளன. இப்படங்களை தமிழீழ மாவீரர் பணிமனையிலும், மாவட்ட அரசியல் துறை செயலகத்திலும் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இம் மாவீரர்களின் பெயர் விபரங்கள் வருமாறு:

வீ. வே. அன்வார் (நிக்கலஸ் மைக்கல் குரூஸ்) மன்னார், கப்டன் ரகுவப்பா (ராஜமாணிக்கம் - ரகுநாதன்) வல்வெட்டித்துறை, வீ. வே. செல்வம் (அன்னலிங்கம் - பகீரதன்) மண்டைதீவு. வீ. வே. அடலன் / பணக்காரன் (மிக்கேல்பிள்ளை - அமலதாஸ்) குருநகர். யாழ். வீ. வே. சரவன் (சிவசுப்பிரமணியம் - தனஞ்செயன்) கோண்டாவில், வீ. வே. ராஜேஸ் (இராசையா - ஜெகநாதன்) அம்பாறை, இடிஅமீன் (கணபதிப்பிள்ளை- சிவலோகநாதன்) நெடுங்கேணி, லெப். கேணல் பொன்னம்மான் (யோகரத்தினம் - குகன்) கலட்டி, யாழ்., வீ வே. சுதா (முத்துச்சாமி-சுதாகர்) வல்வெட்டித்துறை, லெப். சைமன் (கனகரத்தினம் - ரஞ்சன்) அம்பாறை, லெப். எட்வின் (ரத்தினசபாபதி - திலீபன்) மணலாறு, லெப். கடாபி (வேலுப்பிள்ளை கிருஷ்ணானந்தன்) புதுக்குடியிருப்பு.

## கிராம அலுவலர் நேர்முகப் பரீட்சை

கிராமஅலுவலர்வெற்றிடங்களை நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 3 ஆம் திகதி காலை 9.30 மணியளவில் யாழ் மாவட்டப் பிரதிச் செயலாளரின் அலுவலகத்தில் நடைபெறும். வேலணைப் பிரதேச செயலக நிர்வாக எல்லைக்குட்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் தங்களுடைய நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்களை வேலணைப் பிரதேசச் செயலகத்தில் உடன் பெற்றுக் கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

## வீரவணக்கக் கூட்டம்

வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் மாதாந்த வீரவணக்கக் கூட்டம் இன்று கடற்புலிகள் பொறுப்பாளர் திரு. சீர்மாறன் தலைமையில் செம்பியன்பற்று தெற்கு கிராமப் பகுதியில் நடைபெறவுள்ளது.

ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் இதுவரை வீரச்சாவடைந்த மாவீரர்களை நினைவு கூரும்வகையில் இக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## தபால்களை கொண்டுவர பிரதிதபால்மா அதிபர் முயற்சி

(வடமராட்சி)

வடக்கே தாமதமாக வரும் தபால்களைத் துரிதப்படுத்தும் முகமாக வடமாகாண பிரதித் தபால் மா அதிபர் திரு. எஸ். என். சேதுகாவலர் நேற்று 'குமாரி' கப்பல் மூல கொழும்புக்கு புறப்பட்டார்.

இவர் கொழும்பு தபால் மா அதிபருடன் வடக்கே வரும் தபால்களை துரிதப்படுத்தும் நடவடிக்கைகள் பற்றியும் கொழும்பில் தேங்கிக் கிடக்கும் தபால் பொதிகளை விரைவில் கப்பல் மூலம் அனுப்பிவைப்பது சம்பந்தமான விடயங்கள் பற்றியும் எடுத்துரைப்பார்

இதே வேளை கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் தபால் விடயத்தில் ஏற்படுத்திவரும் தடை மற்றும் தபால்கள் உடைக்கப்படுதல் சம்பந்தமாகவும் தபால் அமைச்சருடன் தொடர்பு கொண்டு இதனால் ஏற்படுகின்ற பாதிப்புக்கள் விளைவுகளை எடுத்து விளக்கவுள்ளார். தேவை ஏற்படும் படசத்தில் ஜனாதிபதியையும் சந்திப்பார்.

(யோ)

## புலிகளின் நடவடிக்கை தமிழகத்தில் அதிகரிப்பாம்

விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகள் தமிழகத்தில் கடந்த பத்து நாட்களாக அதிகரித்திருப்பதாக தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. வாழப்பாடி ராமமூர்த்தி தெரிவித்துள்ளார்.

எரிபொருள்கள் தமிழகத்திலிருந்து விடுதலைப்புலிகளால் இலங்கைக்குள் கடத்தப்படுவதாகவும், சில தீவிரவாதக் குழுக்களின் உதவியுடன்தான் தமிழக கரையோரங்களில் இத்தகைய கடத்தல்கள் நடைபெற வாய்ப்புள்ளதாகவும் எனவே மத்திய மாநில அரசுகள் கரையோரப் பகுதிகளின் காவலை இன்னும் தீவிரப்படுத்த வேண்டும் எனவும் தமிழக அரசின் இந்த மெத்தனப் போக்கு வருத்தத்திற்குரியது என்றும் அவர் குறிப்பிட்டார்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 24-02-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 8401

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

26-3690, 26-2786, 42-1019, 24 6972, 28-4255, 26-7307, 41-4194, 24 0649, 26-7217, 26-2827, 24-7672, 26-2941, 26-6461, 27-4920, 26-0535, 24-3436.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்;


41-9989, 41-9167, 27-922, 42-3239, 26 3605, 42-2323, 28-3029, 27 7750, 24-6434, 24-4367, 27-2761, 24 8700, 42-2157, 24-1685, 26-4691, 24-3258, 24 7961, 27 6024.

## தவறிவிட்டது

முத்திரைச்சந்தியிலிருந்து சாவகச்சேரிக்கு வானில் பயணம்செய்யும்போது கைதடிக்கும் நுணாவிலுக்கும் இடையில் ஒரு தொகைப் பணம் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தகவல்:
(4342) S. பொன்னம்பலம்

## 31-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு:
—



மறைவு:
26-01-1993

## கணபதி வைத்திலிங்கம்

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காயும் சுற்றத்துக்கு கொழு கொம்பாயும் நீங்கள் வாழ்ந்து பண்செய்த பசுமை நினைவு எம் மனதை விட்டு அகலாது. உங்களை வணங்குகின்றோம்.

25 02-93 (இன்று) அன்னாரின் அந்தியேட்டி கிரியை எமது இல்லத்தில் நடைபெறுவதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஐயனார் கோவிலடி, மனைவி
கொடிகாமம். (3383) பிள்ளைகள்.

உ
சிவசக்தி மயம்

நாதஸ்வர இசை மேதை

## வி. கே. பஞ்சமூர்த்தியை வாழ்த்துகிறோம்

"சகலகலா வித்தகர்"

### திரு. வி. கே. பஞ்சமூர்த்தி

அவர்களின்

### புல்லாங்குழல் இசை அரங்கேற்றம்

வெள்ளிக்கிழமை (26 - 02 - 1993)

பி. ப 4 மணிக்கு நடைபெற்று

சகல கலைகளுக்கும் இசை மேதையாய் திகழ்ந்து நீண்ட காலம் சகல ஐஸ்வரியங்களையும் பெற்று இனிதே வாழவேண்டும் என்று எல்லாம் வல்ல காளித்தாயை வேண்டுகிறோம்.

வாழ்க இசை; வளர்க அவர் தொண்டு

வாழ்த்துபவர்:
சிவஸ்ரீ ச. சிறீராஜக்குருக்கள்
(சிறீ ஐயா)
(4341) கோண்டாவில் மேற்கு.



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993ஆம்ஆண்டு பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது